# நெல்லைச் சிந்து.

திருநெல்வேலித் தாலூகா, நரசிங்கநல்லூர்

**வ. நா. காமாட்சிநாதன் செட்டியார்**

அவர்கள் இயற்றியது.

இதில்

சுவாமி ஸ்ரீ நெல்லையப்பர் பேரிலும்,

குறுக்குத்துறை முருகக்கடவுள் மீதும் சிந்தும்;

ஸ்ரீ காந்திமதியம்பிகைபேரிற் சந்தப்பஞ்சகமும்,

அடங்கியுள.

திருநெல்வேலி

ஸ்ரீ காந்திமதி விலாஸம் பிரஸில், பதிப்பிக்கப்பெற்றது.

காப்பி ரிஜிஸ்டர்]. **1915.** விலை அணா 2

# பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 10 | 7 | பி[illegible]ன | பிழப்பான |
| 12 | 6 | நீளமழு | நீ[illegible]மழு |
| 13 | 12 | ம்பழி | யெழில் |
| 16 | 9 | சயுக | வீசுக |
| 32 | 18 | வுற்றிம | பெற்றிடு. |
| வெட்டுகிர். | | 6 முதல் 17. | 3 முதல் 14. |

# FORE WORD

7063
(88802)

The sweetness of music is enchanting even to reptiles not to speak of its deep elevating influence on men. It is commonly laid under obligation to stir man's lower nature instead of the higher. In the following musical composition addressed to the deities presiding at the well-known temples of Tinnevelly and Kurukuthurai, the deservedly popular KAVADICHINTHU and THIRUPUGAL SANTHAPA tunes are aptly used by the author, **V N Kamatchinathan Chettiar,** to the great advantage of its free use. The style is flowing as well as lucid and sound and sense hormoniously blend into each other. This composition seems to be an exception to its kind, in avoiding obscenity of expression such as is usually met with in the light vernacular literature It may be safetly used therefore by persons of both sexes and of all ages on all happy occasions to the delectation of the hearers. The piece of literary and musical performance does credit to the author's scholarship and piety and eminently deserves therefore proper encouragement at the hands of all patrons of the sage Agastyar's tongue.

**R. Gopalakrishnier.**

---

* திருநெல்வேலிஜில்லா கோபாலசமுத்திரம் ஹைஸ்கூல்
ஹெட்மாஸ்டர் ப்ரம்மஸ்ரீ R. கோபாலகிருஷ்ணய்யரவர்கள்
B. A. L. T. எழுதிய முகவுரை.

## சாத்துகவி.

---

### கல்லிடைக்குறிச்சி

### ப்ரம்மஸ்ரீ வேதாந்தபாகவதரவர்கள் இயற்றியது.

நேரிசைவெண்பா.

கண்டிபயந் தேனெனவே கற்றபுல வோர்வேண்டக்
கண்டிபயந் தேசிந்தைக் காதலிக்க—வண்டிசையுஞ்
சந்தகமும் போற்றுநெல்லைச் சங்கரர்க்கும் வேலவர்க்குந்
தந்தனன்கா மாட்சிநா தன்.

---

### திருநெல்வேலிப் பேட்டை

### மகா-ள-ள-ஸ்ரீ கி. மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள் இயற்றியது.

திருவளரு கின்றநகர சிங்கநல் லூர்வாழ்
செந்தமிழில் வல்லகா மாட்சிநா தன்றான்
பொருணைநதி வளமிகுநெல் வேலிதிக ழெந்தாய்
பூங்குழலி காந்திமதி பாகரன வரதர்
பெருமைமிகு தருகோயில் கொண்டருள் வியப்பும்
பேருலகர் வந்திறைஞ் சிடுவிழா வளனு
மருவியநெல் லைச்சிந்து பாடியருள் பெற்றான்
மற்றறிஞர் கேட்கின்மன மகிழ்வுறுவர் மன்னே.

---

### சிந்துபூந்துறை தெட்சணாமூர்த்திமடம்,

### ஸ்ரீமத் வேதநாயகசுவாமிகள் இயற்றியது.

கதிவளரு நெல்லைநகர்க் கிறைவ னன்பும்
காந்திமதி கருணையுமே கசிந்து ளோங்கி
மதிவளர்ந்தன் னவருவக்கச் சிந்து சந்தம்
வழுத்தின னறிஞர்மகிழ்ந் தார்வ மோங்க

நிதிவளரு நரசிங்க நல்லூர் வைகும்
மீகாவசிய குலத்தவிர்கா மாட்சி நாதன்
றுதியவரிக் கவிநலத்தின் வண்மை வாணி
சொற்றிறமென் றறைவதற்கோ ரையமின்றே.

---

திருநெல்வேலி ஜில்லா சிவதேவஸ்தானம் கமிட்டி மெம்பர்,

## திருநெல்வேலி

மஹா-ள-ஸ்ரீ வக்கீல் T. S. சுப்பிரமணியபிள்ளையவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

சொல்லரிய பேரின்பந் துய்ப்பர் நரசிங்க
நல்லூர்வாழ் காமாட்சி நாதகவி--நெல்லைவளர்
அப்பன்மேற் சிந்துகம் அம்மைமேற் சந்தமுஞ்
செப்பியதைக் கேட்போர் தினம்.

---

## திருநெல்வேலிப் பேட்டை
## ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் தர்மகர்த்தா

மகா-ள-ஸ்ரீ வே. மு. சிவசுப்பிரமணியபிள்ளையவர்கள் இயற்றியது

கலித்துறை.

ஓரா யிரங்கல்வி கற்றவி னல்லறி வோங்கியன்பி
னீரா நெல் லைச்சிந் துரைத்து மகிழ்ந்தா னிறைதவத்தா
னாரா யணச்செல்வன் பெற்றொளிர் காமாட்சி நாதனென்னும்
பேரா னரசிங்க நல்லூரன் பாவலன் பெட்பினனே.

---

## திருநெல்வேலிப் பேட்டை

மகா-ள-ஸ்ரீ த. ஆறுமுகநயினார் பிள்ளையவர்கள் இயற்றியது.

**கலித்துறை.**

**காமாட்சி நாதக் கவிஞ னரசிங்கைக் காவலன்பா**
**காமாட்சி நெல்லைச் சிந்தாம்பல் சந்தப்பாக் கழறினனன்**
**காமாட்சி செயதுள சொற்பொரு ளன்பின் கனிவுநன்காங்**
**காமாட்சி தங்கட வுள்கழற் காக்குங் கவிகணன்றே.**

சாத்துகவி.

உடம்புக் குறுதுணை யாருமில் லாண்மக்க ளொண்டிருக்கொள்
கடம்புக் குயரின ரென்பார் பலரவர் காணைநல்ல
தடம்புக் கறிவுக்கில் லாங்கல்வி வேட்டுத் கருங்கவிச்சே
யிடம்புக் கிசையாலு மோங்கின னெல்லைச்சிங் தேந்திரனே.

---

திருநெல்வேலி ஜில்லா கோபாலசமுத்திரம்
மக-ா-ா-ஸ்ரீ ச. சண்முகதாச பிள்ளையவர்கள்
இயற்றியது.

நேரிசை வெண்பா

காமாட்சி சோநெல்லைக் கா*ந்திமதி நாதன்மிசை
காமாட்சி நாதன் கழறினன்—றேமாட்சி
யுள்ளதிருப் பாற்கடலி னூடெழுந்து முன்வந்த
தெள்ளமுதம் போன்றதமிழ்ச் சிந்து.

---

இந்நூலாசிரியர் குமாரர்
நாராயணன் செட்டியார் இயற்றியது.

நேரிசை வெண்பா.

சீரார் வளங்கொணா சிங்கநல்லூ ரென்பாட்ட
ஞாராய ணமுகிலி னற்புதல்வன்—பேராளன்
காமாட்சி நாதக் கவிஞனு மெந்தையெழிற்
பாமாது மெச்சும் படி

பூங்கா வளஞ்சேர் புகழ்நெல்லை மாநகரா
மாங்கா ரரன்குமர னம்பிகைமேற்—பாங்காகப்
பாடினன சிந்துசந்தப் பாவமுதந் தேனொருங்கு
கூடியது போன்மகிழ்ச்சி கொண்டு.

நெல்லைச்சிந் தெனனுமிதி னோரற்ற சிற்றின்பச்
சொல்லின்றி நெல்லைத் துதிவளமும்—நல்லொலிசேர்
சாதுரிய வாக்காற் சமைந்துளது கற்புடைய
மாதர்களும் பாட மகிழ்ந்து.

---

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

# நெல்லைச் சிந்து. 7063

ஸ்ரீ நெல்லையப்பர் மீது இயற்றியது.

## 1. தெள்ளுதமிழுக்குதவு சிலன்என்றமெட்டு.

1. செம்பு நதி நீர்மருவு சாலி சூழுஞ்
சேத்திரமெனுந் திருநெல் வேலி அதிற்
சித்திரமார்மூங்கில்தனிற் பத்திரமாய்நீண்டுமிளிர்
ந்தவே யெனையாளவே

2. வேதசர்மா காயவைத்த சாலி தனை
மேகநனை யாமலருள் வேலி கட்டி
மெச்சுமதிபச்சமுடன் ரக்ஷணைசெய்திட்டநெல்லை
வேதா மறை நாதா

3. தீதுபுரி முப்புரத்தார் திருக்கும் அரி
தேவர்முதன் மாலயன்றன் செருக்கும் அறத்
தில்லைக்கிறையுன்வெள்ளைப் பல்லைக்கொடுமுன்மெள்ளச்
சிரித்தாய் புரமெரித்தாய்.

4. வண்மைமிகு சோதியெனக் காணுஞ் சங்கை
வாயினில்வைத்தூதுநெடு மாலும மலர்
வாணியுறுநாவையுடை யோனுமறியாதமரு
மாயா நஞ்சுண்வாயா.

5. அத்தியிலணங்கைவர வழைத்தோன் சிலை
யத்தியின் மிதக்கத் தமிழ் இழைத்தோன் இவ
ராடியபாமாலைதனை நீடியமார்மீதுபுனை
யாதி பரஞ்சோதி.

6. அன்றுகுருநாதனையே செல்லையா என்று
அறைந்துப் பிரணவத்தைச் சொல்லையா என
அன்புடனவனறைந்த மந்திரமதையுகந்த
ஐயனே மழுக்கையனே.

7. செச்சைமரை செண்பகமார் மலரும் தாழை
பிச்சியிரு வாச்சிமுல்லை யலரும் அதன்
தேமருவிநீடுநெல்ல காலுலவிநாறுநெல்லைத்
தேவா யென்முன் வாவா.

8. வாகுமுப்பழமரங்கள் அளிக்குங் கனி
வாசநாட்டிலெங்கும்பரி மளிக்கும் அதன்
மாமிகுந்தநெல்லைநக ருடுறைந்தநல்லபெரு
மானே யருட்டேனே.

## 2. பொன்னுலவு சின்னரிகுள என்றமெட்டு.

1. ஆயன்முன்பு கொண்டுசென்ற பாற்குடம் இடறவிட்ட
தாலவன் கிளைதறிக்கச் சீர்த்தியே பெறு
மாலயன்றுதிக்கவரு மூர்த்தியே நெல்லை
யாருநாயக னுண்டேவுனை
நானுமேபணி நேயர்வீடுற
அன்புடனருள்செய்கின்ற ஆதியே மிகு
வம்புறு நற்கொன்றையணி சோதியே.

2. சீர்மருவு கூடலினுன் மாமிதனக்காக எழு
சிந்துவை யழைத்தசொக்க நாதனே கொடுந்
தந்தியை யுரித்தகா நீதனே முன்
தீயஅண்டச வாய்புகுந்தழி
சேயையுய்ந்திட வேநலம்புரி.
சீலனுக்கிசைந்துசென்ற தூதனே அரி
தேடியுங் காணுமனின்ற பாதனே.

3. நன்மதுரைத் தென்னவன்முன்உன்னடிமைவேதியர்க்காய்
நரியைப் பரியெனவே காட்டினாய் பின்பு
பரியை நரியெனவே ஓட்டினாய் இம

நாககாதலியானநாரியை
வேதனுதிய போதியேதொழ
நற்சிலம்பு மீதுமணஞ் சூட்டினாய் அந்தச்
சிற்பரைக்கு இன்பரசம் ஊட்டினாய்.

4. உம்பர்முதற்றானவரும் பம்பரங்கொண் டொப்புசுதை
யபயரங் கடைந்திலகும் போதினில் பெரு
ஊன்றிகடு அனனகடல் மீதினில் விழ
ஊனமாயெழு ஆலமானது
காதமேபுரி யாதுகாவென
வேரலமிடும் அண்டர்மொழி கொண்டவா கொண்
டாலமெல்லாம் வாரியெடுத் துண்டவா.

---

## 6. செந்தின்மாநகரந்தனில் என்றமெட்டு

---

1. செஞ்சரோருக மங்கையும்வாணியுஞ்
சேர்திருநெல்வேலி வாசா அயி
லார்விழியம்பிகை நேசா மதி
தென்பணம்பிணை கொன்றைமாலிகை
சங்குடன்சுதை யென்புநீறணி
தெய்வமேயடி யென்புவிமேற்செய்த
தீவினைதீர்த்தரு ளீசா உம்பர்
கோவினைக்காத்தவல் லாசா.

2. கந்தமார்குழற் காந்திமதிதனைக்
கடிமணஞ்செய்தவிர் நாதா அன்பர்
செடியிருணீக்குநன் னீதா திகழ்
கஞ்சவஞ்சிமனெஞ்சநாலுமுக
னும்பரினபுற விந்தமேரொரு
காலைத்தூக்கிநற் றில்லையிலாடுங்
கனகசபைநட ராசா புவி
பனகந்தொழுது புகழ் ஈசா.

3. கங்கையார்சடைக் கண்ணுதலே யெனைக்
காப்பது நின்றிருப் பாரம் கதி
சேர்ப்பது நின்னுடை யீரம் கற்
கந்தமொன்றிய விந்தவேதனு
நந்துதங்கிய செங்கையோடவிர்
கண்ணனுனவ னுஞ்செய்யமரறக்
கனற்பிளம்பானநற் சோதியே அயன்
கர்வத்தை நீக்கிய நீதியே.

4. எந்தவேளையு நின்னடி தன்னைநா
னெண்ணும்படிக்குளத் துன்னுவாய் உனை
யின்றிமற்றூர்கதி பன்னுவாய் நல்
விண்செறிந்துகி ளம்புமாலொடு
கங்கைதங்கிவி ளங்குநீள்சடை
யிந்துசேகர னேபஞ்சபாணனை
யெரிவிழியாலன்று தீய்த்தவா சீறி
வருமொரு புலிதனை மாய்த்தவா.

5. பங்கயாசன னுல்வருஜென்மமிப்
பாரினில் நானெடுக் காமல் எனைக்
கார்நிறக்கூற்றடுக் காமல் உமை
பங்கிலொன்றிய சங்கராதிக
மூன்கவின்பெறு பிங்கமேவடி
பற்றிநான்கதி பெற்றிடச்செய்தருள்
பால்விடைமேல்வரு நாதா திரு
மால்விழிதோன்றுநற் பாதா.

## 7. என்னடி நான்பெற்றமங்கை என்றமெட்டு.

1. வண்மைமிருந்தவிர்மானே நறுந்தேனே யின்றுநானேநெல்லை
மாவளஞ்சற்று சொல் வேனே இதை
மனதிற்கனி வதுவுற்றிட
நினைவிற்றுதி வினையற்றிடு

மாதே யிதுநல்ல காலங் கேட்கும்
போதே வருமிகு சீலம்.

2 பூம்பொழிலின்மலர் தூவு மயில்தாவுங் குயில்கூவு நறும்
பூமணம் பொன்னகர் மேவும் நெல்லைப்
புரமீதுறு தமிழ்வாணர்க
ணவில்பாவிசை செவியேறிய
பொதிகை முனிமன நாணு மற்றப்
புலவர்க்கெல்லாமன்பு பூணும்.

3. நெல்லைநகர்தனில்வாசன் உமைநேசன் பவநாசன் றனை
நேசித்தவர்க்கரு ளீசன் நல
நெறியுற்றிவ ணிருபுட்கர
பதநத்திய அடியர்க்கின
னீங்கும்படிக்கருள் புரிவான் நல
மோங்கும்படிவரந் தருவான்.

4. கத்துகடலெனக்கீதம் அதனைதங் கேட்குங்காதம் நல்ல
கார்மலியைப்பசி மாதம் அனிற்
கம்பார்சிவ னும்பார்வதி
யுஞ்சாறுநி கழ்ந்தானபின்
கல்யாணஞ் செய்வது தோணும் அதைக்
காணக்கண்ணாயிரம் வேணும்.

5. தென்சமனை வென்றபாதன் மலர்வேதன் றொழுநீதன் அரி
தேவர்புகழ் நெல்லை நாதன் வளர்
திருவாலய மதிலேகலை
ரவியானதில் அனுவாவினிற்
தீபம் பல்லாயிரந் தோணும் பவி
தெரிசிக்கி லவன்விழி நாணும்.

6. பிச்சியலர்மலிசைட்டங் தனிநீட்ட முளவாட்ட மதிற்
பெட்பாய்நடக்குந்தே ரோட்டம் வடம்
பிடித்தேபல ரிழுத்தேகரி
திவெற்போவென மிதித்தேநிலை

போர்க்கெழுந்தோடுமக் கோலங் கண்ட
பேர்களுக்குண்டாறு கூலம்.

## 8. வன்னத்தினையாவை என்றமெட்டு.

1. நெல்லைநகர்வாழும் ஐயனே உமை
நேரிழையாள்தொழு மெய்யனே மறி
நீளமழுத்தாங்கிய கையனே மலை
நிகர்வேழமுதலையானூறு
தூயமோகமுன் வளையேவிய
நீலவணன்றொழுந் செய்யனே கண்டத்
தாலம்விளங்குநற் றய்யனே

2. இன்பந்தரும்புக ழாவியே கம
ழீசனின் மேகாவிலின் மேவியே எங்க
ளோதந்தவிரெனக் கூவியே கிளா
வெழுவாரியி னெலிபோல்மிகு
துதியோதுக லடியார்றக
ரின்பப்புனன்பலி வாவியே அவர்
துன்பத்தைக்கொல்வச காவியே.

3. பாணம் அயில்விடுக் கத்தியே யன்ன
பார்வைகொண்மாதனை கத்தியே யவர்
பாசத்துறுத்தாநின் பத்தியே புரி
பவநான்முகன் மதனுசக
ளியர்வேலையி லடையாதவிர்
பண்ணவர்போற்றுகன் முத்தியே பெறப்
பாவிக்குமாவரு ளத்தியே.

4. ஈயுமட்டும் வெல்லக் கட்டியே பொரு
ளீயாவிடின்மட மட்டியே யென்
றியம்பியெனக்குநீ எட்டியே யென
விழிவாடுகன் மனமாதர்கள்
மயலாழியி லழியாதடி

யேனிறையாமுனை யட்டியே யின்றி
பேற்றவருள்களைக் கட்டியே.

5. ஐயாவெனக்குனைக் காட்டுவா யுனை
யானந்தவாரியி லாட்டுவா யாட்டி
யன்பர்குழாத்தினிற் கூட்டுவா யென்மே
லணிசூழ்புயி தனைநீடுமொ
ரடியாயள விடுமாதவ
னறியாப்பதமலர் சூட்டுவா யெற்
கருட்பிரசாதத்தை யூட்டுவாய்.

## 9 செந்தூர்வளர் முருகநாதா என்றமெட்டு

1. நெல்லைவளயிந்துமுக மானே கொடியகுழ
லீகநுதல் வேணுமொழி தேனே யெழி
னெற்றிபிறை யத்தமணா
யுற்றநகை• முத்துநல
நேர்மையுடலாடகங்கண் மீனே எனவயாரு
நேரிழையேகேளடிசொல் வேனே.

2 ஆலயத்திற் பொற்றாமரை காணும் அதிற்படிந்தா
லாசகலும் அந்தணருள் பூணும் பின்
னங்கவிரும் பைங்கிளிக
ளின்சொல்புக லும்பகர்ந
லாயிரக்கால் மண்டபமுந் தோணும் கண்களுந
லாடுமிடம் பார்க்கநூறு வேணும்.

3 வெள்ளிமலைபோல நந்தி யாரும் அவனைத்தொழ
வெய்யவினைநீங்கி நலஞ் சேரும் மயன்
வேலையென நாலுருவ
மாலயமு ளருமதன்
விசித்திரம் பார்ப்பவர்க ளாரு மனமுவந்து
மேவுவிழிநோக்கிநிற்க நேரும்.

4. கருமாறித்தீர்த்தமொன்று உண்டு முனிசாபத்தாற்
கஜமானஇந்த்ரத்யும்மன் பண்டு மலைக்
காட்டிடையி னின்றறுகு

வீட்டிடமு யன்றவுடன்
கண்டுவிளாக்கோடியேம ருண்டு அதில்விழவும்
கயமெய்யிண்டுபந்தானருள் கொண்டு.

5. ஒப்பில் வசந்தமண்டப நீடும் அதனருகி
லூற்றபலதாரு அண்ட மூடும் மண
மொன்றியில குங்கொடிகள்
நின்றுமினி ருருசெடிகள்
ஓண்மைதருஞ்சீதளனி கூடும் அங்குசற்று
உற்றிருந்தால்வெப்பமெல்லா மோடும்

6. செப்புமொரு நூற்றெழுபத் தொன்று பரிவாரநற்
றேவதைகள் கோவில்தனி லுண்டு அதன்
றேசுறவெ நாளுநெறி
யோடுநல பூசையது
சேமமுடன்செய்வரன்பு கொண்டு அதனாற்றினம்
சீர்கயிலைநாகவளர்ந் துன்றும்.

## 10. பொன்னுலவு சென்னிகுள என்றமெட்டு

1. அந்தமிகுபூவுலகி லிந்தநெல்லைமாநகர்நல்
லண்டர்புரம்போல்விளங்கி நீடுமே இதைக்
கண்டவர்கலியகல வோடுமே சுற்றி
யாருங்காவினி றைப்பூவினி
லூறுந்தேனினை யீரஞ்சேரளி
யன்புடனுகர்ந்துராகம் பாடுமே அதற்
கானந்தங்கொண்டேமயில்க ளாடுமே.

2. மஞ்சுலாவு சோலைதனிற் றீங்கனியைத்தின்றுபல
வானரங்களித்தமூச லாடுமே சேவல்
வாஞ்சைகொண்டுபேடைதனைத் தேடுமே பகர்
மஞ்சுறும்பல பஞ்சரங்களி
லங்ககம்பல தங்கியுய்ந்திடு
மாமலரின் ஆவியெங்கு நாறுமே யிசை
சேமமுடன் கோகிலங்கள் கூறுமே.

3. தேங்கனிபறித்துதென்று மள்ளர்சங்கு கொண்டெறியத்
தீங்கனிகள் கொண்டுபந்தி வீசுமே அந்தச்
செய்கைகண்ட புள்ளினங்க ளேசுமே வீசச்
சிந்துசாலிகளி தங்குபூமியி
லந்துசேர்பலர் தின்றுசிர்சலி
செய்ததுகலந்தாளென்று சொல்லுவர் பின்னுந்
தீங்கனிகள்கொண்டுசேரி செல்லுவர்.

௪. துங்கமிகுகண்புனன்மிக் கெங்கணும்பெருக்கெடுத்துத்
தூமகிதிறம் பொருந்தி யோடுமே அதிற்
சூழ்ந்துபலமீனினங்க ளாடுமே மிகு
சுந்தரம்பெறு சிந்துநன்செயில்
வந்தடைந்திட வும்பதங்கொணெற்
சுத்தமாய் விளைந்துநில மூடுமே அதன்
அந்துகள் தெரிந்திடாமற் சாடுமே.

௫. ஆரணன்மரபில்வந்த வானவரெனத்திகழும்
அந்தணர்வாழில்லமெங்குங் காணுமே அவை
விந்தவித்தியாலயமாய்த் தோணுமே என்றும்
ஆவியானதை நாசமேபுரி
யாதுநீறது பூசுமேலவ
ரானசைவர் வாழும்வீதி யெங்குமே சிவ
கானநற்றேவாரப்பாமு ழங்குமே.

6. தெற்கிரதவீதிதனின் மிக்கவெழிலோங்கியங்கு
திகழுநடராஜனது மாடமே அதிற்
செய்வதுநிதம்பஜனைக் கீதமே அத்
தேவகானம தோடுநீடிய
சீலமானதை நாடுமானிடர்
செவிவிழிக்களவிலின்பஞ் சேருமே அதன்
சீரரிகொலுமண்டப நேருமே.

7. ஆண்மைநீதிஞானமுற்ற ஆங்கிலதுரைத்தனத்தா
ராட்சிசெய்யுஞ்சாலைபல நீடுமே அதி
லன்புநீதிஞாயம்விளை யாடுமே யெங்கு

மராமார்பல தாருமேவுக
னீடுசாலைகள் தோணுமே பதி
லந்தமிகுவாகனங்க ளேதுமே அதன்
சுந்தரத்தைச்சொல்லவரி தாகுமே.

8. ஆங்கிலந்தனுக்குதமி ழாரியந்தெலுங்கு பயி
லக்கமிகுசாலையெங்குந் தோணுமே பரி
யாற்றுமறைச்சாலைகளுங் காணுமே நர
ரங்கமேவிய வன்பிணைக்களை
யந்தமாகம ருந்தாசயுக
லன்புடைய சாலைகளும் ஆருமே எங்கும்
அத்தர்பன்னீர்சந்தனமபூ நாறுமே.

9. செங்கெல்சுற்றும் நெல்லைநகர் தன்னின்மாலை வீதியெங்குந்
தீபமயமாயனந்தந் தோணுமே அதன்
றேசுகண்டுவானுடுக்கள் நாணுமே யொளிர்
செம்பொனாபொது மங்கைமார்சிவ
சம்புநாரியி னின்பமார்துதி
செப்பியே நடிப்பரிதன் கானமே இந்
செவிகளுக்கு நல்லமுத பானமே.

10. மங்கலஞ்செறிந்தநெல்லை யம்பதியினுளுப்பல
வாத்தியங்களார்க்குமந னாதமே கேட்குஞ்
சேத்திரந்துக்கப்புறமுங் காதமே மிகு
வன்னமார்பல பொன்னிழைகண்
மின்னல்போலொளி மன்னுமாவண
மார்க்கத்தினழகுமிகு மாட்சியே கலை
யேற்கவருவோர்சமுகங் காட்சியே.

11. வானகமளாவுபெருங் கோபுரமோராங்கிணையு
வந்தனம்புரியவிணை போகுமே வளர்
நந்தியைப்பணியநல மாகுமே மிகு
மஞ்சுறுந்திற லம்பினின்றெழு
சம்புவின்பத பங்கயந்தனை
வாழ்த்திநிதநெஞ்சினில்வைத் துன்னுவா யுன்னி
மேற்பரலோகமதின் மன்னுவாய்.

12. வெள்ளைமாட்டிலேறிவரு நெல்லை நாட்டுச் சங்கரனை
வேண்டியேதுதித்து நிதம் பாடுவாய் பவந்
தாண்டியேபரகதியை நாடுவாய் கலி
மேவுபூமியி னெனவாரியி
னூடுலாவிமெய் நாசமாகுமுன்
மேலவர்சொற்கேட்டுநெறி புல்லுவா யிது
மேன்மையோவில்லையோநீதான் சொல்லுவாய்.

13. ஆசைகொண்ட பேய்மனமே ரோசமின்றிக்கள்ளுட
னபின்புகை சாராயநாடிப் போகாதே பேர
யாக்கமற்றுத் தேகநைந்து சாகாதே யெம
னாவிகொண்டவ னேகுமுன்கொடு
வாலமுண்டவர் காலினம்புய
மானதைப்பணிந்துசுகந் தேடுவாய் பர
மானந்தப்பரவையினி லாடுவாய்.

14. இந்தநெல்லைக்கோவில்வளங் கண்டகண்கள்வேறுதல
மற்பமெனக்கொள்ளாதென்றே யுள்ளமெலாம் சுத்தம
மற்றநெல்லை நாட்டிலென்று பண்ணலாம் தமி
ழேற்றமுற்றதி கீர்த்திபெற்றவர்
சாத்திபெற்றுப் பாட்டிசைப்பவ
ரிந்தநாட்டில்வாழ்பவர்தன் மாட்சியே உயர்
வென்பதற்குத்தப்புமினி சாட்சியே.

15. பத்திரஞ்சேர்நெல்லைவள மத்தனையுஞ்சொல்லவாய்கள்
பத்துநூறுபெற்றபாம்பா லாகுமா இதன்
பண்பினமைவுறுமற் போகுமா இங்கு
பானுபோலொளிர் வேறுசாதனின்
ஈசநீராலே மோதலாகினம
பாக்கியம் பெருகுநெல்லை நீடுமே இதைப்
பார்த்திடுங்குருபோன்மனமி லாடுமே.

## 11. பாதிராத்திரிவேளையில் என்றமெட்டு

1. பஞ்சபாதகந் தீர்த்தருணெல்லைப்
பாங்கில்வாழ்கின்ற நாதா சிந்து
பானஞ்செய்முனி போதா மலைப்
பாவையாடன்ச பேதா நின்னைப்
பற்றித்தோத்திரஞ் செய்யுமன்பர்தன்
பங்கில்வாழ்கின்ற நீதா.

2. அங்கண்மான்மழுப் பாசஞ்சூலநல்
லங்கைமீதணி யாண்டவா திருச்
சங்குகாதினிற் பூண்டவா மாலும்
அயனுங்காணாம னீண்டவா நெல்லை
யம்பதியினிற் றம்பிரசபை
யதனிலாடுநற் றாண்டவா.

3 நாகவில்லிஷ நாகம்வன்மத
நாகத்தோல்கொளு மெய்யனே அரி
நாகமன்றெழுந் துய்யனே வரி
நாகத்தார்புக ழையனே வாளரி
நாயகனசிர மைந்திலொன்றறு
னகத்தார்க் கினிய கையனே.

4. பாணிநின்று பறவையோட்டிய
பாவைவள்ளிதன் மாமா பிர
பஞ்சதீர்த்தருள் பூமா மறை
பகருமாயிர நாமா நெல்லைப்
பதியிற்காந்தி மதியெனுந்திருப்
பச்சைவல்லியின் வாமா.

5. ஏர்பெறுந்தமிழ் முனிவனுகத்
திருந்திழிக்கதி வேகங் கொண்
டெழுபொருநைப்ர வாகம் அதை

யெட்டிப்பார்க்கிலறுஞ் சோகம் அத
னிருமருங்கினுங் காமலர்க்களுண்
டிசைக்கும் வண்டுபல் ராகம்.

6\. தென்னைவாழை கமுகு மாவளர்
சிந்துபூந்துறை யோரம் வரு
செய்புமாநதி நாரந் தனிற்
றேகந்தோய்ந்திடக் கோரம் எனுந்
தியகன்றணி சேருமென்றுநூல்
செப்புமேயுப காரம்.

7\. தாலமீதுறு நதிக்கெலாம்பகர்
தாயப்ரவன்னியே போக்கியம் அதன்
றண்புனல்வெகுசி லாக்கியம் குளித்
தார்பவர்க்கிடர் போக்கியம் மிறைச்
சடிலர்கன்னல மீருவாரதன்
சமீபம் வாழ்வதே பாக்கியம்.

---

## 12. ஆறுமுகவடிவேலவனே என்றமெட்டு.

1\. அம்புவியிற்பல வம்புகள்செய்தே
யலைந்துழல்வன் மனமே உன்ற
னுணவம்விட்டான் பாதமலர்க்குநீ
யன்புசெய்வாய் தினமே.

2\. வம்புறுகொன்றைமலர்ச்சடையானென
வாழ்பவனைத் தினமே நீ
வாழ்த்திடுவன்பவ ரூயிறுகண்டழி
வன்பணியா மனமே.

3\. வான்மணாகிஞ்சுக வாரிசமாம்பல்கொள்
வாவியம்பாயு செல்லை தனின்
மன்னுமரன்பத நாளும்பணிந்துமே
வாழ்பவர்க்கேது தொல்லை

4. பொன்றனைகாரியெ னுந்திரியாசைப்
புணரியிலாழு முனே யெமன்
பொன்றிடச்செய்துயிர் கொண்டிடுமுன்னரன்
பூங்கழல்தன்னை நினை.

## 13. சென்னிகுளநகர் வாசன் என்றமெட்டு.

1. மன்றல்கமழ்வன மீது வண்டு
மைஞருகுயில்களெப் போது நவன்
மாசற்றிடு மிசைகேட்டவர்
சீர்பெற்றிடு விரன்மூக்கினில்
வைப்பா ரின்பந்துய்ப்பார்.

2. பண்ணவர்நாடிது காணும் எனப்
பன்னும்படிநெல்லை தோணும் அதிற்
பாடுந்தொனி கேட்கின்முனி
யாழும்புகழ் தோற்குமிமிழ்ப்
பாகுங் கசப்பாகும்.

3. நெல்லைநகர்தனில் வாசா உனை
நேசித்தவர்க்கரு ளீசா இந்த
நிலமெச்சிடு பொதிகைக்குறு
முனிவர்க்குயர் தமிழ்சொற்றிடு
நீதா வுமைநாதா.

4. வன்னவிடையுந்து மீசா பரா
வாலமனேன்மணி நேசா சிறு
மதியம்பக இறகண்டச
முதகம்புனை விரிசெஞ்சடை
வாகா நல்விவேகா.

5. சென்னியிரைந்துள வேந்தன் றனைச்
செற்றபவம்பெறு காந்தன் கடற்
றீரத்தினின் மீதுற்றுனை

நேசத்தொடு பூசித்திடர்
தீர்ந்தான் இன்பமார்ந்தான்.

6. அந்தக்கிரீடிமுன் அன்று திற
லாவியனுகவே சென்று அம
ராடிச்சிலை யான்மொத்தது
நீபெற்றவ னுசைக்கணை
யளித்தா யின்பம்விளைத்தாய்.

## 14. பூமிமெச்சிடு மண்ணுமலை என்றமெட்டு.

1. வையமகிழ்ந்துதுதி செய்யுந்திருநெல்வேலி
வாசனே உமைநேசனே பவநாசனே கையின்
மானுமழுவுநன்கு தோனும்படி விளங்கும் ஈசனே.

2. அங்கிங்கெனுமலே யெங்கணுமேகமா
யுற்றவா துயரற்றவா மிகுநற்றவா சந்தி
யாரும்புயனநாளி லோதுமந்திரங்காதிற் பெற்றவா.

3. பூமனனங்கனமன வானைதபுரியாக்கதி காட்டுவாய்
வினையோட்டுவா யின்பமூட்டுவாய் உன்றன்
பொங்கமருவுமருட் டுங்கக்கடலிலெனை யாட்டுவாய்.

4. நாயின்பதியுநுவன் மாயின்பதியுந்தொழு
நாதனே யதிநீதனே மலர்ப்பாதனே உனை
நம்புமடியவர்க ளின்பம்பெறவருளும் வேதனே.

5. தாருகர்மாதர் மயல்கொளும்ரூபமாய்ச் [நலந்
சென்றவா கரியைவென்றவா புலியைக்கொன்றவா
தங்குங்கணப்பனன்பாய்த் தந்தவிறைச்சிதனைத் தின்றவா.

6. அக்குமாலைதிகழுஞ் சொக்கர்மேனிகொளெங்கள்
ஐயனே சூலக்கையனே நல்லசெய்யனே கட
லப்பிற்சிலைமிதக்கச் செப்பியவர்புகழுந் துய்யனே.

## 15. பவனகிரியதனுட்டானே என்றமெட்டு.

1. தென்னையிந்துயலா மாழை வன்னவாழை அதிற்
றேன்வடிந்திடு மாபழங்களை
வானரங்கடன் வாயிலின்பொடு
தெவிட்டும் படிபுகட்டும்.

2. கள்ளைப்பருகியின்பங்கொண்டு எண்ணில்வண்டு பெருங்
காவிலூரதர் யாழிலேயெழு
கானமோவென வோதுசீரிசை
காணும் இன்பந் தோணும்.

3. நெல்லைநகர்நடுவிற் றுணை மன்னுவானே யவ
நீடுவாரியி னூடலைந்தழி
யாதுநானினி மாநலம்பெற
நீயே எண்ணுவாயே.

4. திருநெற்பொலியுநெல்லை மீதே பதுமமாதே வளர்
தேசுபெற்றதி சீரிலங்கிய
வேய்வனத்ததி லேயெழும்பிய
தேவே யென்னையாவே.

5. அரவப்பணி புனைந்த வாகா அம்மைபாகா நிதம்
ஆதிநின்சிறு பாதபங்கய
மேவியின்புற நீயுவந்தென்னை
யாளா யெழிற் றேளாய்.

6. அமலக்கிளிப்பரித்தேர் வீரன் கன்னன்மாரன் றொடு
ஆலபாணம தான்மருண்டதி
காமவாரியி னூடுழைந்தழி
யாதே அருளென்மீதே.

7. இன்னல் தரும்புவியின் மேலே எண்ணிமாலே கொளும்
ஏழைநானினி வேதனல்வரு
காயமார்புவி மீதெடாதரு
ளீவா யென்முன்வாவா.

8. உவணக்குதிரையுந்தும்வீரன் மறுவுண்டதீரன் கட
லூடுவான்பணி மீது தூங்கரி
நாதனைவேண்டிய ஆழியீந்தரு
ஞருவே அன்பா திருவே.

---

## 16. நேமமாய்ப்பணியண்ணாமலை என்றமெட்டு

---

1. வன்னமுப்பழமைந் தென்னை மிகமலிந்து மன்னியே
எங்கும்வளர்ந்து துன்னியே வளர்
மாமைமருவுநெல்லைச் சாமிதனைப்புகழ்நீ பன்னியே.

2. கந்தமரையிறைவன் றந்தபுலாலெனுமிக் காயமே
நிலைநிற்பது மாயமே யெனக்
கருத்திலெணியான்றன் நிருத்தபதப்பணிதல் ஞாயமே.

3. செம்பொன் அசலமின்னை நம்பியுலவுகின்ற ஜென்மமே
அதிநல்வருங் கன்மமே அறச்
செய்யுநெல்லையிறைக்குத் துய்யபணிபுரிதல் தன்மமே.

4. திணையிலுயர்கங்கைதன் வினையையடுபொருளைத் தீரமே
மிளிர்புரத்தி னோரமே திகழ்
திருநெல்வேலியுறை செல்வர்தாள்பணித லீரமே.

5. செந்நென்மருவுநெல்லை யண்ணலருளினைத் தேடுவாய்
தொண்டரினத்திற் கூடுவாய் இந்த
ஜெகத்தின்மயக்கமதையகற்றியவன்புகழைப் பாடுவாய்.

6. செப்புபுவிற்பல அப்பிலுழலுகின்ற சித்தமே
இனியுகந்து நித்தமே நெல்லைத்
தேவின்பாதந்தொழு பாவமகலுமிது சுத்தமே.

---

## 17. மஞ்சுநிகர்குந்தளமின்னே என்றமெட்டு.

---

1. நந்துவளைமேவு கரனுந் தவளநிற மாதுதனை
நாவதனில்வைத்த பரனுஞ் சசி
நண்பனுஞ்சிகி யுந்துநாதனும்
அங்குசம்புனை செங்கைவேழமு
நாடவருள்கூரு மாதியே அனவரத முனதுபத
நம்பினோரையாளு நீதியே.

2. கந்துகடல்ஆல முண்டவா எழுகலியை பயின்முனிக்
கண்டுபோற்றமிழ்முன் விண்டவா கமழ் [குக்
கஞ்சமேவதிய னஞ்சியேயழ
முன்புமோதிய கந்தநாதனைக்
கண்மணிபோலன்றுபெற்றவா திருநெல்லையில் வளர்கவுரி
காந்திமதிபாக முற்றவா.

3. அன்பர்நத்தும்இன்ப வெள்ளமே பவக்கடல்கடத்திவி
அன்புமலிஞான வள்ளமே நுவ [டும்
லம்பொன்மாதுக நய்புவானது
விண்டமாதவா பங்கமாகிய
அல்லைநீக்கும்வல்ல பானுமேவ இளவனத்தின் முனமுளை
அனவரததான தானுமே. [த்த

4. விண்டுமரையுந்தி வந்தவன் மலர்ச்சரங்கொள் பவன்மரு
மேதியுநதுமால்நிறைந்தவன் புரி [ப்பு
வினையினால்வரு துயரமானது
யெனையுறுதினி அருளிராயன்முன்
வேண்டவளர்மகா லிங்கமே இதழிதும்பை நதியறுகு
பூண்டவெழில் தோன்றும் அய்யமே.

---

## குறுக்குத்துறை

## முருகக்கடவுண்மீது இயற்றியது.

---

### 1. திருவுற்றிலகுகங்க என்றமெட்டு

---

1. அருள்பெற்றி லகுசெம்பு நதிமத்தியின்மிகுந்த
அழகுற்றநிலுறைந்த வாசனே உனைத்
தொழுமந்தர் பவபந்த நாசனே வியன்
ஆறுவாண்மதி சீறுநாகம்வெ
ணீறுமாண்மழு ஆரமாதிகள்
அவிரங்கொள் இறைதந்த சேயனே அவன்
செவியிற் பிரணவஞ்சொல் வாயனே.

2. அமுதக்கடனடுவில் அரவச்சயனமிசை
அமலக்கண் வளர்பவன் மருகோனே அன்பர்
தமிழைப்புயவரையி லணிவோனே யெழி
லாதியோர்கர மீதுசீர்பெறு
மாவினோர்கனி யானதேபெற
அசலச்சிகியில்வலம் வருவோனே மிக
லசுரத்திரளை வெலு முருகோனே.

3. மலயமலை பெற்றிடு பொருநைப்புனன் மொய்த்திடு
மதிலுயராலய வாசனே உனைத்
துதிசெயும் அன்பர்த நேசனே யிரு
மாதர்சேர்புய மீதுசீர்தரு
நீபமாலிகை யோடுநீடிய
மாமயிலார்முரு கேசனே தமிழ்
மலயமுனிக்கரு ளீசனே.

4. புலியிற்கிழவனென்னும் உடல்பெற்றுத்தினைப்புனப்
புறத்தில்வள்ளியைச்சென்று கண்டவா அந்தக்
குறத்திகொடுத்த மாவை யுண்டவா உண்டு
பொங்குதேயிடா மங்குதேயுயி
ரென்செய்வேனினி சிந்துதாவெனப்
பொய்கையில் வள்ளியை விட்டவா அந்தத்
தையலைமன்றல்செய் திட்டவா.

5. செருக்கத்தியுரித்தவர் கருப்பத்தில் வருமொரு
மருப்பத்திக்கிளையகு மாரனே பல
பொருப்புற்று வாழ்குக வீரனே முன்
றேவராதியர் காவனேயற
வோதுசூரன்மெய் மாளவேல்விடு
தேவே திருச்செந்தூர் வாசனே யெனை
யாவே யவுணர்குல நாசனே.

6. வலையன் புதல்விபெற்ற முனிவனுவந்துசொற்ற
மாபாரதம் பொறித்த வேதனை யிந்தச்
சீர்பார் புகழுங்கண நாதனை அன்று
வாகுசேர்குற மாதுகானிடை
பீதியேயுற யானையாகமுன்
வாவென்றழைத்த குமரேசனே நல
மேவுங்குறுக்குத்துறை வாசனே.

7. அஞ்சையடக்கியுன்ற னடியைப்பரவளற்கு
னருட்பிரசாதத்தை யூட்டுவாய் இனிக்
கருப்பை புகாக்கதி காட்டுவாய் முன்
ஆயனுமரி மாயமோதிட
நாகமாயவ னுகவேறுவ
லாரிபைபெற்றருண் மெய்யனே குற
நாரிகைபற்றிய கையனே.

8. அரிமரை நாபியில் வரும்விதி பிரணவத்
தருத்தஞ்சொலாமையாலவ் வேதனே அழச்
சிரத்திற் புடைத்தகர நாதனே யணி

யாணநாகம ணியுமாமக
ளாகுமானொடு வேடமாதெனும்
அரிவையர்பதியுனைப் போற்றுவாம் உன
தடிமலர் சிரசின்மே லேற்றுவாம்.

---

## 2. சந்தவளைவந்தகுக என்றமெட்டு.

---

1. செம்புகநி பூடிவளர் சீலா சசி
சிந்துபணிதாங்குமரன் பாலா கமழ்
செங்கடப்பந்தாரணிந்த கோலா
தண்டைக்காலா அநுகூலா அன்பர்
செய்யுள்புனை வாகுமலை வேலா.

2. தானவர் குலத்திரட்குப் பங்கமே செய்த
தருவர்குல கரிக்குச் சிங்கமே இரு
தையலர் நடுவிலுற்ற அங்கமே
திருத்தங்கமே புகழ்த்துங்கமே நாவல்
சருவபுலவருக்குச் சங்கமே.

3. தருமப்பழம்பழுக்குந் தருவே தந்திச்
சருமம்புனையிறைக்குக் குருவே வளர்
சன்மார்க்க நெறிக்கொரு கருவே
அன்பர்திருவே கமழ்மருவே கூடற்
சங்கமுறுகீரர்புக ழுருவே.

4. செந்திநகர் மீதவிருஞ் சேயா வுயர்
செங்கனகம்போலொளிருங் காயா முன்பு
தேவர்சிறை மீட்டிவிட்ட ராயா
பவளவாயா தொண்டர்நேயா திருச்
செங்கரத்தில் வேல்பிடித்த தூயா.

5. பன்னிருவிழிமருவு தேவா நல்ல
பச்சைமயிலேறியென்முன் வாவா வந்தென்
பாங்கிருந்து நாளுமெனைக் காவா
யினியெனுவா லெழிற்பாவல துனைப்
பாடுதற்கு நல்லதுணை யாவாய்.

6. சீற்றமொடு நமனென்னை வலையே வீசிச்
செற்றிடுமுன் வாபனாம தலையே நலஞ்
செய்யாவிடில் வேறுகதி யிலையே
குணமலையே கனிகலையே அன்பர்
செடியற ஆடும் அரு ளலையே.

## 3. பாலைவாய்க்கமுகில் வந்தார் என்றமெட்டு.

1. ஆயர்மனைதோறுஞ்சென்று பால்தயிர்நெய்வாரியுண்ட
ஆரணமுகுந்தன்மகிழ் மருகோனே கையில்
வாரணக்கொடிபிடித்த முருகோனே.

2. தாரணியிற்போர்க்களத்திற் பார்த்தனுக்குத்தேர்விடுத்த
சாரதியின்றங்கைபெற்ற மைந்தனே செந்தூர்
வாரிகரைமேலுறைந்த கந்தனே.

3. செங்கனிகளீயும்வள நன்கவிர்குறுக்குத்துறைச்
செம்புநதிமீதமர்ந்த சேயனே இளம்
பங்கயனொளி நிகர்த்த காயனே.

4. உம்பருக்கு வம்பிழைத்த தும்பிமுகத்தானவனை
யோங்கியேவேலாலெறிந்து கொன்றவா காட்டில்
வேங்கைமரமாகி முன்பு நின்றவா.

5. கங்குகரையின்றியன்பர் முன்புசெய்த பாவமென்னுங்
காரிருளை நீக்குஞான தீபமே அன்பர்
சீர்பயிர்க்கு நீரிறைக்குங் கூபமே.

6. கல்லினாலெறிந்தவர்க்கும் வில்லினாலடித்தவர்க்குங்
காலினான்மிதித்தவர்க்கும் இன்பமே தந்த
நீலகண்டன் பெற்றளித்த பிம்பமே.

7. நீபமலர்த்தோடிலங்க நூபுரப்பதமிலங்க
நீலமயிலின்மீதுகந்து வருவாயே வந்துன்
காலையுன்னுந் தாசர்க்கின்பந் தருவாயே.

8. தோஷமென்னும்பாவவெள்ள மூழ்குமெலைனயுனருட்
டோணிதனிலேற்றிக்கண் விடுவாயே முத்திக்
கரையினிற்போயிருக்க நடுவாயே.

TIRUVANMIYUR, MADRAS-41.

2063
(8402)

## ஸ்ரீ காந்திமதியம்பிகை பேரில்

## சந்தப் பஞ்சகம்.

### I

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த தனதான.

(கருவினுரு வாகிவந்து)

வரிமருவு பூவிலன்று சிறுமதலை யாகவந்து
மணிபெருக வேவளர்ந்து விடமேபோல்
மருவுவிழி மாதர்மண்பொன் மயலையி லேததும்பி
மலையுமடி யேனுமன்பு பெறவாராய்
திருமருவு மார்பன்விந்த மலரிலுறு வேதனெங்கை
திகழ்விமலன் வேலிணைந்த புயன்மேலோர்
செழுமையவி ராயிரங்க ணிறைமுனிவர் நாகரும்பர்
திகழ்கமலை வாணிநந்தி தொழுமாதே
யருள்வடிவ மாயிலங்கு னழகுமலி தாளிறைஞ்சி
யருணெறியை நாடுதொண்டர் பெருவாழ்வே
யசலவிறை மாதுகொங்கை நுகர்சிறுமி யாய்விளங்கி
யானைமண மேபுரிந்து வளர்தாயே
விரிகடலி னீரையுண்ட முனிவன்மலை மீதிருந்து
விழுபொருளை நீர்பொருந்த நிலமேலே
மிளிர்பயிர்க ளாதிகங்கு கரையிலையெ னுவிளங்க
விளைதிருநெல் வேலிதங்கு முமையாளே.

### II

தானதன தானதந்த தானதன தானதந்த
தானதன தானதந்த தனதான.

(காரணமதாகவந்து).

வாரிவுனை பூவினன்கு மாரனென வேவிளங்கி
மாவளைகை நாதனென்று சொலவேசீர்
மாவிலக வாழிநுங்கெ னேமஞ்சிடு னூதர்வந்து
வாவெனவி ளும்புமங்க ளிருகாழி

நேரமது வாருமென்று கூறமுடி யாதவிந்த
நீளுடலை விண்ணினம்பி யழியாதே
நீதமுறு நாரியுன்பொ னேரடியை நான்வணங்க
நீகருணை யாயிரங்கி யருள்வாயே
பாரமயி லேறியுந்து மாறுமுக வேளைமுன்பு
பாலனென வேபயந்த வனைபேணீர்
பாலலையி னூடெழுந்த சீரமுத மாயியம்பு
பாவலர்கள் பாவணிந்த புயமானே
வீரைகெலி பாகறெங்கு காவல்வட மாகடம்பு
வேய்கமுகு தாழைதுன்று மழகோடே
மேன்மையுறு பூவினங்க ளுறுபொழிலானதுங்கொள்
வேணுவன மீதிலங்கு முமையாளே.

# III

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன தனதானா
(வங்கார மார்பிலணி)

சஞ்சார மார்வனச விம்படைய வேதன்மிகு
சிங்கார மாமைமலர் வாளியுறு மாரனதி
சங்கார வேலையிறை யானகம ளூர்புரியும் வினையாலே
சங்காடு வாரிவளை நேமிதனி லேமைபல
துன்பாரு மாகமது மேவியது போதுமிடர்
தங்காத சீரையினி யானடைய நீகருணை புரிவாயே
யஞ்சித னீரறுகு நாகம்வளை யாரிதழி
யென்பால மான்மழுவ னூகவுரி யானையுரி
யம்பூதி சேருமிறை யோனிடது பாகமுறு பெருவாழ்வே
யஞ்சாத வேழமுக னும்பரன் மாளவொரு
கொம்பான்முன் வீசிவினை யாடியவி நாயகனை
யன்பாக வேமதலை யாயுதவு மேன்மையுறு மெழின்மாதே
மஞ்சேறு வாசவனை வானவனை வாய்மையுறு
பஞ்சாக னேவம ராடியவி சாசார்கள்

வன்றேக நாசமுற வேவிளைசெய் வேலுருவ முடையானே
மங்காத சீர்குலவு நீள்கயிலை யீசனுட
னண்பாக நீமுன்விளை யாடுபொழு தோர்பொய்மொழி
வம்பாக வேசொலவு மாரிபணி யாகநுவல் வடிவானே
செஞ்சாலி சூழ்மதுரை யூரிலொரு கூன்வழுதி
துஞ்சாது நோயகல நீறுதவி நீள்பனுவல்
செம்பாகு போலமொழி செய்துகர ஞானவமு தருடாயே
செங்கால்கொ ளேரெகின வாவிநதி யோடைமடு
நன்கேறு கோவிலணி மேடைமலி வீதிதிகழ்
சிங்கார மார்திருநெல் வேலிநக ரூடுவள ருமையானே.

## IV

தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன தனதான.

(அனிச்சங் கார்முகம்)

விரைச்செந் தாமரை போன்முக நீடவு
மெறிக்கும் பூசண மாடவு மாலது
விளைக்கும் பாவனை மேவிய வேசையர் மயலால்வேள்
விடுக்கும் பாணம தாலய ராதிமிழ்
கருப்பஞ் சாறென நாணிசை பாடவும்
விரித்துன் சீரது கூறவு நீயருள் புரிவாயே
மருக்கந் தாமரை யாள்வளர் வாயனு
மனிச்சங் கார்வளை சேர்கர மாயனும்
வரிப்பங் கேருக நேர்கழல் சீர்முடி யறியாதே
மறைத்தந் தோவென நீடிய நாயக
னகைக்குந் தீகொடு மூபுர நீறெழ
வலித்தன் றேசுரர் கோயற வாடிய சிவன்மாதே
செருக்கஞ் சாதவல் வாலியி னாருயிர்
தொலைத்தம் பாலொரி ராவண னீளுடல்
சிதைத்தன் பானவி பீடண னானவ னழியாதே
இரைச்சிந் தாடவன் வாழவு மாமுடி
கொடுத்தின் பானவி ராகவ னாரது
திருத்தங் காளனு மாபனை யேபுவி தருமானே
சுரர்க்கஞ் சாதவி ரோதிக ளானவ
சுரக்கும் பானதை நீடிய வேல்கொடு
துடைத்தஞ் சேலென வோதிய சேயனை யருடாயே

துதிக்கும் பாவலர் பாமொழி கீதமு
முழக்கும் பேரிகை தூரிய மானவை
தொனிக்குங் கானமு நீடுநெல் வேலியி னுமையாளே.

---

## V

தனதனத்தன தந்தான தன
தனதனத்தன தந்தான தன
தனதனத்தன தந்தான தன தனதான.
(மலடிவயிற்று),

அலைகடல்சுற்றிய மண்பாலே யொரு
மகவெனவுற்றபி னன்பாலே யனை
யணிதனமுற்றிடு வெண்பாலே தர வதனாலே
யதிவலியுற்றபி னின்போடே பல
வுணவுபுசித்தும தன்போலே யுட
லழகுமிகுத்துவ ளர்ந்தேநீ டிய மயலாலே
யிலகிடுமத்தமண் மின்பாலே நசை
கொடுமனமொத்தி னன்பாலே யுன
திருபதபுட்கர மன்போடே நின னையாதே
யிகமிசைபற்பல துன்பாலே மிக
வயர்வதுவுற்றிடு மென்பாலே யுன
திதமுறுகட்கொடு பொன்கோதா யரு ளொடுபாராய்
மலையிறைபெற்றகு ருந்தேசீர் திகழ்
சசிதரன்மெச்சிய நங்காய்மா மகன்
மருவுமரிக்கொரு தங்காய்நீ ளரு ளுடையாளே
வறுமையொழிக்கும ணங்கேமே லவர்
கவலைதனைக்கொலு நஞ்சேதீ யவர்
வலியையறுக்குமொ ரம்பேமா தவர் பெருவாழ்வே
கலைமுழுதுற்றவர் பண்பேதா சர்கண்
மகிழ்வொடுநத்துந லின்பேகூ மிசை
கமகமெனக்கமழ் வம்பேநீ திமொ டொளிர்வாளே
கலைமகளொத்திடு நன்றேடே யுயர்
நிதிமகணித்திய மின்போடே வளர்
கனமதுபெற்றிடு நன்கேயார் நெலை யுமையாளே.

1

3. அரி—இந்திரன்.
4. சோதி—சூரியன் ; காலும்—ஒளிரும்
5 அசநி—வலும்பு ; சிலை—கல் ; அநதி—சமுத்திரம்.
7. மேதம—வாசனை ; கால—காற்று.

2

1. கிளை—மூங்கில் ; வம்பு—வாசனை.
2 கூடல்—மதுரை ; சிந்து—சமுத்திரம் ; உரோடசம் முலை.
3. தென்னவன—பாண்டியன் ; இமோகசாதல்—பார்வதி ; சிலம்பு—மலை.
4. பமபரம—மந்தரகிரி ; சுதை—பால ; அம்பரம்—கடல் ; ஊன்றி—பாம்பு ; கடு—விஷம் ; காதம்—மகாலே.

6

1. சரோருகம்—தாமரை ; தெண்பணம—அழகியபாம்பு ; பிணை—மான ; சுதை—வெண்மை.
2. செடி—பாவம, கஞ்சவஞ்சி—இலக்குமி, விந்தம—தாமரை
3. ஈமம இருமை ; நந்து சங்கு
4. இனை—பூமணம ; மால—பெருமை ; எரிவிழி—நெற்றிக்கண.
5 பங்கயாசனன்—பிரமன் ; கூற்று—எமன ; பங்கம்—சிவப்பு.

7

3. புட்கரம்—தாமரை.
4. அல்—காது ; கம்பு—சங்கு ; சாறு—திருவிழா.
5. சமன்—எமன ; கலைாவி—தைமாதம ; உவா—அமாவாசை.
6 சேட்டம்—ஆனிமாதம் ; வாட்டம் தெரு ; நிதிவெற்பு—பொனமலை.

8

1. வளை—சக்கரம்.
2 ஆவி—வாசனை ; ஏதம்—பாவம்.
3 நாசகன்—எமன் ; அதி—கடல்.
4. கனக்கட்டி—பொன்கட்டி.

9

1. நீகம்—மேகம் ; சேறு—வில் ; அத்தம்—கை ; மனை—தாமரை ; நகை—பல் ; ஆடகம்—பொன்.
4 அறகு—சிங்கம் ; கயமெய்—யானையுடல்
6. நாகம்—மலை.

10

1. ஏரம்—அழகு ; அளி—வண்டு.
2. மஞ்சு—அழகு ; பஞ்சரம்—குருவிக்கூடு ; அங்ககம—அழகிய குருவி ; ஆவி—வாசனை ; கோகிலம—குயில்.
3. கவி—குரங்கு.
4. பதம்—அழகு.
5 விந்தவிசு—பிரமன்.
6. அரி—இந்திரன்.
10. ஆவணமார்க்கம்—கடைவீதி ; கலை—ஆடை ; சமுகம்—கூட்டம்.
11. மஞ்சு—அழகு ; அம்பு—மூங்கில்.
12. கலி—துன்பம் ; எனவாரி—பாலைகடல்.
15. பானு—சூரியன் ; ஈரம்—இருமை ; நீர—கடல்

11

1 சிந்து—சமுத்திரம் ;
3. நாகவில்—மலைவில் ; நாகத்தோல்—யானைத்தோல ; நாகமன்—தேவலோக அரசன்.
4. பிரபஞ்சம்—மாயை.
5. தமிழ்முனி—அகஸதியன் ; நாகம்—மலை
6. நாரம்—தண்ணீர் ; அணி—தன்மை

12

2 வம்பு—வாசனை ; ஞாயிறு—சூரியன்.
3. வான்மரை—வெண்டாமரை ; இஞ்சகவாரிசம்—செந்தாமரை ; ஆம்பல்—அல்லி ; அம்—தண்ணீர்.
4. புணரி—சமுத்திரம்.

13

1. மன்றல்—வாசனை.
4. மதியம்—சந்திரன், பகம்—கொக்கு; அண்டசம்—பாம்பு; உதகம்—கங்கை.
6. கிரீடி—அர்ச்சுனன்; ஆவியன்-இடையன்; மொத்து-அடி.

14

2. சத்தி—வேலாயுதம்.
3. பூமன்—பிரமன்; அனங்கன்—மன்மதன்.
6. அக்குமாலை—உருத்திராட்சமாலை; அப்பு—தண்ணீர்; சிலை—கல்.

15

1. மாழை—மாமரம்.
4. பதுமமாது—இலக்குமி.
6. அமலம்—அழகு; ஆலம்—புஷ்பம்.
8. உவணம்—கருடன்; வான்—அழகு

16

1. மாமை—அழகு.
3. அசலை—பூமி.
4. திணை—பூமி.
6. அப்பு—கடல்.

17

1. சத்து—சங்கு; வளை—சக்கரம்; சசி—இந்திராணி; சிகி—மயில்.
2. கலி—கடல்; கஞ்சவேதியன்—பிரமன்.
3. உகம்—பூமி; நம்பு—விருப்பம்.
4. விண்டு—விஷ்ணு; மருப்பு—கொம்பு; மேதி—எருமை; மால—பெருமை; இதழி—கொன்றை.

முருகக்கடவுண்மீது இயற்றியது.

I

2. அசல்—பூமி.
3. நீபமாலிகை—கடப்பமாலை; மலயமுனி—அகஸ்தியர்.
4. சிந்து—தண்ணீர்.
5. ஒருமருப்பத்தி—விநாயகர்.
7. ஆரியை—பார்வதி.
8. விதி—பிரமன்; நாகமன்-தேவேந்திரன்.

2

1. சசி—சந்திரன்; சிந்து—கங்கை; பணி—பாம்பு; வாகு—புயம்.
2. தகுவர்—அசுரர்.
3. தந்திச்சருமம்—யானைத்தோல்; கூடல்—மதுரை.
6. வெஃடி—பாவம்; அலை—சமுத்திரம்.

3

1. வாரணம்—கோழி.
3. பங்கயன்—சூரியன்.
5. கூபம்—கிணறு.
7. நீபமலர்—கடப்பமலர்; நூபுரம்—சிலம்பு.

சந்தப் பஞ்சகம்.

I

வரி—அழகு; மஞ்சு—அழகு.

II

வீரை—வாழை; பாகல்—பலாமரம்; வடம—ஆலமரம்.

III

சஞ்சாரம்—வாசனை; வனசம்—தாமரை; நேமி—பூமி; ஆகம்—உடல்; அஞ்சிதன்—அழகியசந்திரன்; வளை—சங்கு; ஆர்—ஆத்தி; இதழி—கொன்றை; உடைவரி புலித்தோல்; பூதி—திருநீறு; நிசாசரர்கள்—அசுரர்; முராரி—விஷ்ணு; பணி—பாம்பு; எகினம்—அன்னம்

IV

விரை—வாசனை; கம்—வெள்ளை மணி—அழகு; வளை—சக்கரம்; வரி—அழகு; பங்கேருகம்—தாமரை; நோய்—துன்பம்; ஆடிய—செய்த; திரைச்சிந்து—அலைகடல்.

V

அத்தம்—பொன்; நசை—ஆசை; புட்கரம் தாமரை; குருந்து குழந்தை; சசிதரன்—சிவன்; கூ—பூமி; வம்பு—வாசனை.